بسم الله الرحمن الرحيم

# ஜுமுஆ பேருரை

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 20.03.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

---

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இங்கு இன்று சூரிய கிரகணம் இருந்தது. இதே போன்று இன்னும் சில நாடுகளிலும் இந்த கிரகணம் தென்பட்டது. பிடித்தது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பாக இது போன்ற சந்தர்ப்பத்தின் போது துஆக்கள், பாவமன்னிப்பு போருதல், சதகா கொடுத்தல் மற்றும் தொழுமாறும் வழிகாட்டி இருக்கின்றார்கள். இந்த அடிப்படையில் எங்கெல்லாம் கிரகணம் ஏற்பட்டதோ அங்குள்ள ஜமாஅத்களுக்கு கிரகணத் தொழுகை தொழுமாறு வழிகாட்டப்பட்டது. இங்கு நாங்களும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நடைமுறைக்கு ஏற்ப தொழுதோம். ஹதீஸ்களில் அல்லாஹ்வின் குறிப்பான அடையாளங்களில் சூரிய, சந்திர கிரகணங்களும் ஒரு குறிப்பான அடையாளமாக கூறப்பட்டுள்ளது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றுக்களின் அடிப்படையில் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகைக்கு சூரிய சந்திர கிரகணம் ஒரு வலுவான அடையாளமாகும். இது அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு சாதகமாக கிழக்கிலும் மேற்கிலும் நிறைவடைந்தது.

ஆக, இந்த அடிப்படையில் கிரகண அடையாளத்தோடு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் ஜமாஅத்திற்கும் ஒரு குறிப்பான தொடர்பு இருக்கின்றது. இன்றைய இந்த கிரகணத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களினுடைய வருகையின் அடையாளம் என்று கூற முடியாதது தான். ஆனால் இந்த கிரகணம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் அடையாளமாக வெளிப்பட்ட கிரகணத்தின் பக்கம் நிச்சயமாக கவனமூட்டுகின்றது. பிறகு இன்றைய நாள் அதாவது இன்று வெள்ளிக்கிழமையாக இருக்கின்றதனால் இந்த கிரகணம் அந்த அடையாளத்தின் பக்கம் கவனமூட்டுவதற்கு காரணமாக இருக்கின்றது. வெள்ளிக்கிழமைக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையோடு ஒரு குறிப்பான தொடர்பு இருக்கின்றது. பிறகு மார்ச் மாதமாக இருக்கின்றதனாலும் கவனம் ஏற்படுகின்றது. ஏனென்றால் மூன்று நாட்களுக்குப்பின் 23 மார்ச் அன்று மஸீஹே மவ்வூது தினமாகவும் உள்ளது. வாதம் செய்யப்பட்டது.

ஆக, இந்த மாதம், இந்த நாள், இந்த கிரகணம் பல்வேறு கோணங்களில் ஜமாஅத்தினுடைய வரலாற்றை நினைவூட்டக் கூடியவைகளாக இருக்கின்றது. எனவே, நான் சூரிய கிரகண தொழுகையின் குத்பாவிற்காக ஆதாரங்கள் எடுத்த போது ஜுமுஆ குத்பாவிலும் கிரகணம் தொடர்பாக பேச வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. மேலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சந்திர சூரிய கிரகணம் தொடர்பான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களையோ அல்லது ஒரிரு மேற்கோள்களையோ மேலும் அதே போல் இந்த கிரகணங்களைப் பார்த்து இந்த இயக்கத்தில் இணைந்து தன்னுடைய ஈமானை வலுப்படுத்திய சஹாபாக்களின் சம்பவங்களை கூற வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

முதலில் நான் கூறியது போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பாக இந்த கிரகணங்களுக்கு குறிப்பான முக்கியத்துவம் வழங்கியுள்ளார்கள். அன்னாருடைய வாழ்க்கையில் ஒருமுறை கிரகணம் ஏற்பட்டது. அது தொடர்பாக ஏராளமான ஹதீஸ்கள் உள்ளன. ஒரு ஹதீஸை உங்கள் முன் வைக்கின்றேன்.

ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். சூரிய கிரகணம் ஏற்பட்ட போது நான் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் வந்த போது அவர்களை தொழ கண்டேன். மக்களுக்கு என்ன ஆயிற்று ? இவ்வேளையில் தொழுகின்றார்கள் என்று நான் கூறிய போது, ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் வானத்தின் பக்கம் சைகை செய்தவாறு சுப்ஹானல்லாஹ் என்று கூறினார்கள். நான், ஏதேனும் அடையாளமா என்று கேட்டேன். அதற்கு அவர்கள் தங்களது தலையை அசைத்து சைகை செய்தவாறு ஆம் என்று கூறினார்கள். அஸ்மா கூறுகிறார்கள். நானும் தொழுவதற்காக நின்று விட்டேன். எதுவரை என்றால் எனக்கு மயக்கம் வந்து விட்டது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவிற்கு நீளமாக தொழ வைத்தார்கள் என்றால் எனக்கு மயக்கம் வந்த விட்டது. நான் என்னுடைய தலையில் தண்ணீரை ஊற்ற ஆரம்பித்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் தொழுது முடித்த பிறகு அன்னார் அல்லாஹ்வை புகழ்ந்தார்கள். பிறகு இதற்கு முன்பு கண்டிராத அனைத்து பொருள்களையும் இப்போது இந்த இடத்தில் நின்றவாறு கண்டுவிட்டேன். எதுவரை என்றால் சொர்க்கத்தையும் நெருப்பையும் கூட. மேலும் நீங்கள் கபருகளில் தஜ்ஜாலின் குழப்பத்தைப் போன்றோ அல்லது அதோடு ஒத்த குழப்பத்தால் சோதிக்கப்படுவீர்கள் என்று வஹீ மூலம் தெரிவிக்கப்பட்டது என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பிறகு கூறினார்கள்: உங்களில் ஒருவர் கொண்டு வரப்படுவார். மேலும் அவரிடம் முஹம்மது (ஸல்) அவர்களைப் பற்றி உனக்கு என்ன தெரியும் ? என்று கேட்கப்படும். மூஃமின் அல்லது நம்பிக்கை கொள்ளக்கூடியவர் (அஸ்மா கூறுகிறார்கள். இந்த இரண்டு வார்த்தைகளில் ஏதேனும் ஒன்று பயன்படுத்தப்பட்டது.) முஹம்மது (ஸல்) அவர்கள்

அல்லாஹ்வின் தூதராவார். அன்னார் எங்களிடம் அடையாளங்களையும் வழிகாட்டல்களையும் கொண்டு வந்தார்கள். நாங்கள் அவரை ஏற்றுக் கொண்டோம். மேலும் நம்பிக்கை கொண்டோம். மேலும் அன்னாரைப் பின்பற்றினோம் என்று கூறுவார். அப்போது அவரிடம் நீ சிறந்த தூக்கம் தூங்குவாயாக. ஏனென்றால், நீ உன்மையில் நம்பிக்கை கொள்ளக் கூடியவராவீர் என்பது எமக்கு தெரியும் என்று கூறப்படும். மேலும் எவர் நயவஞ்சகராக இருப்பாரோ அல்லது சந்தேகம் கொள்ளக்கூடியவராக இருப்பாரோ அவர் நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி அறிய மாட்டேன் என்று கூறுவார். மக்கள் ஒரு விஷயத்தை கூறினர். நானும் அதற்கு ஆமாம் என்றேன் என்று கூறுவார்.

இதே போன்று இது அல்லாஹ்வின் அடையாளங்களில் ஓர் அடையாளமாகும். இதற்கு எவருடைய இறப்போடும் வாழ்வோடும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் இதில் துஆ செய்ய வேண்டும். பாவமன்னிப்பு கோர வேண்டும் என்றும் கூறினார்கள்.

இப்போது நான் சூரிய சந்திர கிரகணங்கள் தொடர்பான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோளை எடுத்து வைக்கின்றேன். அன்னார் கூறுகின்றார்கள். அடையாளங்களின் மீது அடையாளங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவ்வாறிருந்தும் கூட மவ்லவிகளுக்கு உண்மையை ஏற்றுக் கொள்வதன் பக்கம் கவனம் இல்லையே என வியப்பாக இருக்கிறது. அனைத்து மைதானங்களிலும் அல்லாஹ் அவர்களுக்கு தோல்வியையே தருகின்றான் என்று கூட அவர்கள் பார்ப்பதில்லை. ஏதேனும் இறை உதவிகள் அவர்களுக்கு சாதகமாகவும் இருக்க வேண்டும் விரும்புகிறார்கள். ஆனால் உதவிக்கு மாறாக நாளுக்கு நாள் இழிவு மற்றும் அவர்களின் தோல்வியே நிரூபணமாகின்றது. உதாரணமாக நாட்களை கணிப்பவர்கள் மூலமாக இந்த ரமலானில் சூரியன் மற்றும் சந்திரனுக்கு கிரகணங்கள் ஏற்படும் என்ற கருத்து பரவிய போது மக்களினுடைய உள்ளத்தில் இது வாக்களிக்கப்பட்ட இமாமின் வருகைக்கு அடையாளமாகும் என்ற எண்ணம் வந்த போது மஹ்தி மற்றும் மஸீஹ் என்று வாதம் செய்யக்கூடியவர் இந்த நபர் ஆவார் ஒருவர் மைதானத்தில் நிற்கின்றார் மக்கள் அவரின் பக்கம் குனிந்துவிடக்கூடாதே என மவ்லவிகளினுடைய உள்ளத் துடிதுடிக்க ஆரம்பித்தது. அப்போது அந்த நபரை மறைப்பதற்காக முதலில் ஒரு சிலர் இந்த ரமலானில் ஒருபோதும் சூரிய சந்திர கிரகணங்கள் நிகழாது. மாறாக, இமாம் மஹ்தி வரும்போது தான் அது நடக்கும் என்று கூற ஆரம்பித்தனர். ரமலானில் சூரிய சந்திர கிரகணம் நிகழ்ந்து விட்ட பிறகு இந்த சூரிய சந்திர கிரகணம் ஹதீஸின் வார்த்தைகளுக்கு ஏற்ப இல்லை என சாக்குபோக்கு கூறினர்.

ஆனால், இது எந்த அளவிற்கு ஒரு படிப்பனைக்குரிய இடமாக இருக்கின்றது. வானமும் இவர்களுக்கு எதிராக ஆகிவிட்டது. பூமியின் தற்போதைய நிலைமைகளும் இவர்களுக்கு எதிராக ஆகிவிட்டது. ஒருபக்கம் வானம் அவர்களுக்கு எதிராக சான்று பகர்கின்றது. மறுபக்கம் பூமி சிலுவையின் வெற்றியின் காரணமாக சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றது. இது இவர்களுக்கு எப்படிப்பட்ட ஒரு இழிவாக இருக்கின்றது.

அன்னார் ஓரிடத்தில் கூறினார்கள். நமக்காக சூரிய சந்திர கிரகணத்தின் அடையாளங்கள் வெளிப்பட்டது. நூற்றுக்கணக்கான மக்கள் அதனைக் கண்டு நமது ஜமாஅத்தில் இணைந்தனர். மேலும் இந்த சூரிய சந்திர கிரகணங்களால் நமக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. எதிரிகளுக்கு இழிவு ஏற்பட்டது. நாம் வாக்களிக்கப்பட்ட மஹ்திக்கான வாதம் செய்கின்ற போது சூரிய சந்திர கிரகணம் நிகழ வேண்டும். அதே சமயம் அரபு நாடுகளில் அதற்காக எந்த அடையாளமும் இருக்கக்கூடாது என்று அவர்களுடைய உள்ளம் விரும்பியதை அவர்களால் சத்தியம் செய்து கூற முடியுமா ? ஆனால் அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக அது வெளிப்பட்ட போது நிச்சயமாக அவர்களுடைய உள்ளங்கள் துக்கமடைந்திருக்கும். அவர்கள் அவர்களுடைய இழிவை பார்க்க நேரிட்டிருக்கும்.

இப்போது ஒரு சில சஹாபாக்களின் சம்பவங்களை கூறுகின்றேன். ஹஸ்ரத் குலாம் முஹம்மது சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இந்த எளியவனுடைய கிராமத்தில் முதலில் பத்ருத்தீன் சாஹிப் என்ற பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் மவ்லவி பத்ருத்தீன் சாஹிபோடு நின்று கொண்டிருந்தார். பகலில் சூரியனுக்கு கிரகணம் ஏற்பட்டது. மவ்லவி சாஹிப் அவர்கள் சுப்ஹானல்லாஹ் மஹ்தி சாஹிபின் அடையாளம் வெளிப்பட்டு விட்டது. அவருடைய வருகையின் நேரம் வந்துவிட்டது என்று கூறினார். ஒரு சில காலம் கடந்த பிறகு மவ்லவி சாஹிப் அஹ்மதி ஆகி விட்டார். மவ்லவி சாஹிப் மிகவும் தூயவராகவும், நல்லியல்பு கொண்டவராகவும், விசுவாசம் நிறைந்தவாராகவும் இருந்தார். அவர் ஒரு வருடமாக முயற்சி செய்து தன்னுடைய பெற்றோரையும் மனைவியையும் அஹ்மதியாக்கினார்.

அஸதுல்லாஹ் குரைஷி சாஹிப் ஹஸ்ரத் காஸி அக்பர் சாஹிப் (ரலி) அவர்கள் பற்றி எழுதுகின்றார்கள். காஸி அக்பர் சாஹிப் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு அஹ்லே ஹதீஸில் இருந்தார்கள். சூரிய சந்திர கிரகணம் வானத்தில் ஏற்பட்டது. இமாம் மஹ்தி (அலை) அவர்களது காலம் மிக அருகில் இருக்கிறது என்பதை அன்னார் ஏற்கனவே அறிந்திருந்தார். சூரிய சந்திர கிரகணத்தின் மாபெரும் அடையாளம் வெளிப்பட்ட போது தன்னுடைய வட்டத்து மக்களோடும், மாணவர்களோடும் இதுபற்றி பேசப்பட்டது. இவர்களுடைய பேரன் பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள். அவர் மியான் முங்கா சாஹிப் அவர்களிடமிருந்து இவ்வாறு கேட்டுள்ளார். ரமலானில் சூரிய சந்திர கிரகணம் ஏற்பட்டது. அப்போது காஸி சாஹிப் அவர்கள் இமாம் மஹ்தியின் வருகைக்கான அடையாளம் வெளிப்பட்டுவிட்டது. நாம் அவரை தேட வேண்டும் என்று கூறினார்கள். அந்த நாட்களில் சார்கோட் மக்கள் பொருள்கள் வாங்குவதற்காக ஜஹ்லம் போய் வந்தார்கள். காஸி சாஹிப் அவர்கள் ஜெஹ்லம் போகக் கூடியவர்களிடம் மவ்லவி

புர்ஹானுத்தீன் சாஹிப் அவர்களைச் சந்தித்து சூரிய சந்திர கிரகண அடையாளம் வெளிப்பட்டுவிட்டது. தாங்கள் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் பற்றி எங்களுக்கு வழிகாட்டுமாறு கேட்டு வாருங்கள் என்று கூறினார்கள்.

ஆக, அவர்கள் ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்களை சந்தித்தார்கள். ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்கள் ஒரு சில புத்தகங்களையும், ஒரு கடிதத்தையும் காஸி சாஹிப் அவர்களுக்கு அனுப்பினார்கள். கடிதமும், புத்தகமும் கிடைப்பதற்கு முன்பாகவே அவர் கனவில் எவரோ ஒருவர் மூன்று புத்தகங்கள் படிப்பதற்காக அவரிடம் கொடுத்துள்ளார். அதில் முதல் புத்தகத்தை படிப்பதற்காக திறந்த போது அதில் அசுத்தம் நிறைந்துள்ளது. துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்தது. அதனால் அவர் அந்த புத்தகத்தை வீசி விட்டார். பிறகு இரண்டு புத்தகங்களைப் பார்த்தார். அதிலிருந்து ஒளிக்கதிர்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஹஸ்ரத் மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் அவர்கள் அனுப்பிய புத்தகம் கிடைத்த போது அன்னாருடைய கனவு இவ்வாறு பூர்த்தியானது. அதாவது ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்கள் அனுப்பிய புத்தகங்களில் ஒன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதத்தை மறுக்கக்கூடியதாக இருந்தது. அவர் முதலில் இந்த புத்தகத்தை படிக்க ஆரம்பித்தார். அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்பாக உள்ளம் புண்படக்கூடிய வார்த்தைகளைக் கண்டு அதைப் படிப்பதை விட்டுவிட்டு அதை வீசி விட்டார். பிற இரண்டு புத்தகங்களையும் கடிதத்தையும் படித்த போது அவைகள் தன்னுடைய கனவில் கண்டது போன்றே இருந்தது. ஆராய வேண்டும் என்ற எண்ணம் மேலும் அதிகமானது. அதனால் ஆராய்ச்சிக்காக மூன்று நபர்கள் அடங்கிய ஒரு குழுவை காதியான் அனுப்பினார்கள். அந்த மூவரும் காதியான் சென்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கையில் பைஅத் செய்யக்கூடிய நற்பாக்கியத்தைப் பெற்றார்கள்.

இந்த குழுவும் பட்டாலா சென்ற போது மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி இவர்களைத் தடுத்தார். அவர்களுக்கு சற்று உபசரிப்பு செய்து விட்டு நீங்கள் வீணாக பல நாட்கள் நடை பயணத்தில் கஷ்டத்தை மேற்கொண்டு காதியான் செல்கின்றீர்கள். நீங்கள் தொலை தூரத்தில் இருக்கின்றதனால் உங்களுக்கு சரியான அறிவு இல்லை. மிர்ஸா சாஹிபினுடைய இந்த அனைத்து செயல்களும் பொய்யானவையாகும். எனவே நீங்கள் திரும்பி சென்று விடுங்கள் என்று கூறினார். மவ்லவி சாஹிப் இவ்வாறு கூறியதோடு மட்டுமின்றி அவர்களை ஊருக்கு வெளியே கொண்டு விட்டு விட்டு வந்தார். ஆனால் அவர் சென்ற பிறகு இந்த மூவரும் திரும்பிச் செல்வதற்கு பகரமாக காதியான் சென்று விட்டார்கள். அங்கு சென்று அல்லாஹ்வின் அருளால் பைஅத் செய்தார்கள். அதற்கு பிறகு காஸி சாஹிப் அவர்கள் முதலில் எழுத்து மூலமாக பைஅத் செய்தார்கள். பிறகு காதியான் சென்று கையில் பைஅத் செய்யக்கூடிய நற்பாக்கியத்தையும் பெற்றார்கள்.

பிறகு அபுல் அதா சாஹிபின் பாட்டனார் காஸி மவ்லா பக்ஷ் சாயிப் இவர் ஜலந்தர் மாவட்டத்தின் அஹ்லே ஹதீஸின் பெரிய பேச்சாளராவார். சூரிய சந்திர கிரகண அடையாளம் வெளிப்பட்ட போது அவர் தன்னுடைய ஒரு குத்பாவில் ரமலான் மாதத்தின் 13 மற்றும் 28 தேதிகளில் முறையே சந்திர கிரகணமும் சூரிய கிரகணமும் பற்றி விளக்கமாக கூறியவாறு இது இமாம் மஹ்தியின் வருகையின் அடையாளமாகும். இப்போது நாம் இமாம் மஹ்தி எப்போது எங்கிருந்து வெளிப்படுவார் என்று எதிர்பார்த்து இருக்க வேண்டும் என்று கூறினார். இந்த குத்பாவிற்கு நல்ல ஒரு தாக்கம் ஏற்பட்டது. அபுல் அதா சாஹிப் அவர்களுடைய தந்தை ஹஸ்ரத் மியான் இமாமுத்தீன் சாஹிப் அவர்களுக்கு வாதம் செய்யக் கூடியவர் பற்றி தெரிய வந்தது. புத்தகங்களை படித்து ஆராய்ந்த பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கையில் பைஅத் செய்யக்கூடிய நற்பாக்கியத்தைப் பெற்றார்கள்.

செய்யது நஸீர் ஹுஸைன் ஷா சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள். சூரிய சந்திர கிரகணம் நிகழ்ந்த போது நான் என்னுடைய வீட்டில் இருந்தேன். என்னுடைய தந்தையார் இது மிர்ஸா சாஹிபின் உண்மைக்கு சான்றாகும் என கூறினார். இது என்னிடம் ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படத்தியது. எனக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய நல்வாய்ப்பு கிடைத்தது.

செய்யது ஜெய்னுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷா சாஹிப் கூறுகிறார்கள். அந்த காலத்தில் முஸ்லிம்கள் வீணாகி விட்டனர். இது 13 ஆம் நூற்றாண்டின் இறுதியாகும். மேலும் இமாம் மஹ்தி வரக்கூடிய காலமாகும். அதற்குப் பிறகு ஹஸ்ரத் ஈஸாவும் வருவார்கள் என பொதுவாக பேசப்பட்டு வந்தது. அதனால் என்னுடைய தாயார் அந்த மஹ்தி மற்றும் ஈஸாவின் வருகை பற்றி மிகவும் மகிழ்ச்சியுடன் கூறி வந்தார்கள். அந்த காலம் அருகில் வந்து விட்டது என்றும் சூரிய சந்திர கிரகணம் ஏற்படுவதும் மஸீஹின் காலத்திற்கு குறிப்பான ஒன்றாகும் என்றும் மேலும் அது நிகழ்ந்து விட்டது என்றும் கூறி வந்தார்கள். பிறகு எவ்வாறிருப்பினும் அல்லாஹ் இந்த முழு குடும்பத்திற்கும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய நல்வாய்ப்பினை வழங்கினான்.

ஹஸ்ரத் மிர்ஸா அய்யூப் பேக் சாஹிப் அவர்கள் கூறி வந்தார்கள். 1894 மார்ச் மாதத்தில் சந்திரனுக்கு ரமலான் மாதத்தில் கிரகணம் பிடித்தது. அதே ரமலானில் சூரிய கிரகணம் ஏற்படக்கூடிய நாள் நெருங்கியதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோடு அடையாளத்தை காண வேண்டும் மேலும் அன்னாரோடு கிரகண தொழுகை தொழ வேண்டும் என்ற எண்ணத்துடன் சனிக்கிழமை அன்று மாலையில் லாஹூரிலிருந்து கிளம்பி ஏறக்குறைய இரவு 11 மணிக்கு பட்டாலா வந்தடைந்தனர். அடுத்த நாள் காலை கிரகணம் பிடிக்க இருந்தது. புயல் வீசிக் கொண்டிருந்தது. இடி இடித்துக் கொண்டும், மின்னல் வெட்டிக் கொண்டும் இருந்தது. காற்று எதிர் திசையில் அடித்துக் கொண்டிருந்தது. கண்களில் மண் விழுந்து கொண்டிருந்தது. பட்டாலாவிலிருந்து காதியானுக்கு நடந்து சென்று கொண்டிருந்தனர்.

சரியாக அடியெடுத்து வைக்க முடியாமல் இருந்தது. மின்னல் வெட்டும் போது மட்டும் தான் பாதை தென்பட்டது. அவர்களோடு அவருடைய ஊரைச் சார்ந்த மவ்லவி அப்துல் அலி சாஹிப் அவர்களும் இருந்தார்கள். மொத்தம் 3 பேர் சென்றனர். என்ன நடந்தாலும் இரவோடு இரவாக காதியான் சென்றடைய வேண்டும் என்ற உறுதியாக எண்ணம் கொண்டனர். அஹ்மதிய்யதை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோடு சூரிய கிரகண தொழுகை தொழ ஆசைப்பட்டனர். மூவருமே வழியில் நின்றவாறு மிகவும் உருக்கத்துடன் துஆ செய்தனர். அல்லாஹ்வே! பூமி மற்றும் வானத்தின் மீது வல்லமை கொண்ட இறைவா ! நாங்கள் உன்னுடைய பணிவான அடியார்களாவோம். உன்னுடைய மஸீஹை காண்பதற்காக செல்கின்றோம். நாங்கள் நடந்து செல்கின்றோம். குளிராக இருக்கிறது. நீ எங்கள் மீது கருணை காட்டுவாயாக. வழியை எளிதாக்குவாயாக. எதிர் திசையில் வீசக்கூடிய காற்றை நீக்கவாயாக. கூறுகிறார்கள். துஆவின் இறுதி வார்த்தை நாவிலிருந்து வந்ததும் காற்றின் திசை மாறியது. எதிர் திசையில் வீசுவதற்கு பதிலாக எங்கள் பின்புறமாக வீச ஆரம்பித்தது. எந்த அளவுக்கு வேகமாக பின்னால் இருந்து காற்று வீசியது என்றால் அவர்களுடைய பயணம் எளிதாகி விட்டது. எனவே, மீண்டும் கிளம்பினோம். காலையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோடு சூரிய கிரகண தொழுகையை தொழுதோம்.

மவ்லவி குலாம் ரஸூல் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள். 1894 ல் சூரிய சந்திர கிரகணங்கள் ஏற்பட்ட போது நான் லாஹூரில் மவ்லவி ஹாபிழ் அப்துல் மன்னான் சாஹிபிடம் திர்மதி படித்து வந்தேன். ஆலிம்களினுடைய குழப்பமும், அச்சமும் என்னுடைய உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்த ஆலிம்கள் மக்களுக்கு சின்ன சின்ன ஆறுதல்களை கூறினார்கள். ஆனால் இந்த உண்மையான அடையாளத்தின் காரணமாக மிக விரைவாக ஹஸ்ரத் அக்தஸின் பக்கம் மக்களின் கவனம் சென்று விடுமே என்று உள்ளத்தால் மிகவும் பயந்திருந்தனர். அந்த நாட்களில் லகூகேவைச் சார்ந்த ஹாபிழ் முஹம்மது சாஹிப் அவர்களிடம் இந்த அடையாளத்தை மிர்ஸா சாஹிப் தனக்கு சான்றாக கூறுகிறார். நீங்கள் இது தொடர்பாக என்ன கருத்து கொண்டுள்ளீர்கள் என மக்கள் அவரிடம் வினவினர்.

அவர் கூறினார். நான் நோயாளியாக இருக்கின்றேன். மிகவும் பலவீனம் அடைந்துள்ளேன். உடல் ஆரோக்கியமான பிறகு தான் நான் எதையும் கூற முடியும். விரைவிலேயே அவர் மரணித்து விட்டார். எழுதக்கூடியவர் கூறுகின்றார். இதனைக் கண்ட பிறகு என்னுடைய உள்ளம் மிர்ஸா சாஹிபின் உண்மைத்துவத்தைப் பற்றி நிம்மதி அடைந்து விட்டது. ஆனால் ஹதீஸ் அறிவை பூர்த்தி செய்வதற்கு நான் அமிர்தஸரஸ் சென்று விட்டேன். அங்கு இரண்டு, மூன்று வருடங்கள் இருந்து ஹதீஸ் படிப்பை முடித்த பிறகு தாருல் அமானுக்கு சென்று ஹஸ்ரத் சாஹிபிடம் பைஅத் செய்யக்கூடிய நல்வாய்ப்பை பெற்றேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு சஹாபி சேக் நஸீருத்தீன் சாஹிப் 1858 ல் ஜலந்தர் மாவட்டத்தில் சிகந்தர்பூர் என்ற ஊரில் பிறந்தார்கள். ஒரு கனவின் அடிப்படையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தின் நற்பேறு பெற்றார்கள். ஒரு நாள் ஒரு பள்ளிவாயிலில் தொழுது கொண்டிருந்த போது ஒரு மவ்லவி சாஹிப் மிகவும் குழப்பமான நிலையில் தன்னுடைய தொடையில் அடித்தவாறு சூரிய சந்திர கிரணத்தைப் பற்றி கூறியவாறு இப்போது மக்கள் மிர்ஸா சாஹிபை ஏற்றுக் கொண்டு விடுவார்களே என்று கூறிக் கொண்டிருந்தார். ஆகவே, மிகவும் உருக்கத்தோடு துஆ செய்ய ஆரம்பித்தார்கள். இறைவா நீயே எனக்கு வழிகாட்டுவாயாக. அல்லாஹ் அவர்களுக்கு வழிகாட்டினான். அவர் கனவில் ஒரு மிகப்பெரிய துன்பம் அவரை தாக்குவதாகவும், அதை அவர் துப்பாக்கியினால் சுட்ட போது அது புகையைப் போன்று காணாமல் போனது. பிறகு அவர் ஓர் உயர்வான இடத்தில் பள்ளிவாயிலில் ஜமாஅத்தான தொழுகையில் இணைவதாக கண்டார்கள். இந்த கனவை அவர் ஒரு மவ்லவி சாஹிபிடம் கூறினார். அந்த மவ்லவி சாஹிப் நீங்கள் ஷய்த்தானை வெற்றி கொண்டு விடுவீர்கள். மேலும் ஒரு நல்லடியார்களின் ஜமாஅத்தில் இணைவீர்கள் என விளக்கம் கூறினார். அந்த நேரத்தில் தான் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதம் பற்றி கேட்டு காதியான் சென்றடைந்த தான் கனவில் கண்டதைப் போன்ற நிலைமைகளைக் கண்டு எவ்வித கேள்வியும் கேட்காமல் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கைகளில் பைஅத் செய்தார்கள்.

அல்லாஹ் உலகிற்கும் அறிவை வழங்குவானாக. இன்றைய காலத்தின் முஸ்லிம்களுக்கும் இமாமை எதிர்ப்பதற்குப் பகரமாக அன்னாரை ஏற்றுக் கொள்ளக்கூடிய நல்வாய்ப்பினை வழங்குவானாக.

தொழுகைகளுக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் நயீம் அஹ்மது பாஜ்வா சாஹிப் அவர்களின் மகன் மாணவர் அஹ்மது யஹ்யா பாஜ்வா அவர்களுடைய ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள். மார்ச் 11, 2015 அன்று ஒரு விபத்தில் 27 வது வயதில் வஃபாத் ஆகி விட்டார். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். அல்லாஹ் இவரின் பதவிகளை உயர்த்துவானாக.

Translated By : Moulavi. M.B. Tahir Ahmad